# சட்டமா அதிபர் திணைக்களம்

## கூட்டுத்தாபனப் பிரிவு

# பதவி வெற்றிடம்

**சட்டமா அதிபர் திணைக்களத்தின் கூட்டுத்தாபனப் பிரிவில் பிரதம நிதி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**தகமைகள் மற்றும் அனுபவம்:**

- பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பட்டப்படிப்பு

அல்லது

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை மட்டத்திலான தகைமையினைப் பெற்றிருத்தல்

அல்லது

- பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் (CIMA) இடைநிலை மட்டத்திலான தகைமையினைப் பெற்றிருத்தல்

அல்லது

- இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA) இடைநிலை மட்டத்திலான தகைமையினைப் பெற்றிருத்தல்

**அரச சேவை / கழகம் / சட்டப்பூர்வ அமைப்புகள் / கூட்டுத்தாபனம் / நியதிச்சட்ட சபைகள் / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறவனத்தில் கணக்கியல் மற்றும் நிதியியலில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்.**

**வயது**

- 30 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

- கவர்ச்சிகரமானதொரு வேதனப் பொதியொன்று வழங்கப்படும்.

நீங்கள் அரச / பகுதியளவிலான அரச ஊழியராக இருந்தால், விண்ணப்பத்தை நிறுவன தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்

மேற்குறித்தவை தொடர்பில் தங்களுக்கு ஆர்வம் இருக்குமேயானால், தங்களின் விண்ணப்ப படிவத்துடன் தங்களின் பணி தொடர்பான அனைத்துத் தகைமைகள், அனுபவங்கள் மற்றும் ஏனைய சாதனைகள் என்பன உள்ளடங்கலான விரிவான சுயவிபர பத்திரத்தினை உரிய ஆவணங்களின் பிரதிகளுடன் குறித்த பணி தொடர்பான இரண்டு தொழில் ரீதியான பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடன் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

இதனை, கூட்டுத்தாபனப் பிரிவுத் தலைவர், சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு 12, என்ற முகவரிக்கு 2026.06.22 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக முகவரியிட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பித்த பதவியின் பெயரைக் குறிப்பிடவும். (தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் குறுகிய எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கூட்டுத்தாபனப் பிரிவுத் தலைவரின் முடிவே இறுதியானதாகும்.)

**கூட்டுத்தாபனப் பிரிவுத் தலைவர்,**
**சட்டமா அதிபர் திணைக்களம்**
**கொழும்பு 12.**